Koviloor Digital Library

ஆசாரிய சுவாமிகள்

அருள்வாக்கு

A.No. 16153
Q1:332ப

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-5

ஆசாரியசுவாமிகள் அருள்வாக்கு

மூலம் :

திரு ஏ. எஸ். இராமன்

தமிழாக்கம் :

ஏ. ஆர். அரங்கநாதன்

KOVILOOR ANDAVAN LIBRARY, KOVILOOR
A. No. 16153

வானதி பதிப்பகம்
தி. நகர் · சென்னை-17

Koviloor Digital Library

முதற் பதிப்பு: ஆகஸ்டு, 1964
இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 1974
மூன்றும் பதிப்பு : ஜுன், 1977

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 1-25

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-14.

Koviloor Digital Library 4-5

முன்னுரை

"வர்ணாசிரம தர்மம்தாம் நாட்டின் நல்வாழ்வுக்கு எதிரி" எனக் கூறுவோர் பலர். "வர்ணாசிரம தர்மம் அழிந்ததால்தான் நாட்டின் நல்வாழ்வு குறைந்தது" எனப் பகர்வோர் பலர். இத்தகைய எதிர்வாதங்களிடையே பொது மக்கள் எவ்விதம் இதனின் பயனை உணர்வது என்று புரியாது வாழ்ந்தனர். என்னைப் போன்று சாதாரண நிலையிலிருந்து இவைகளைப் பற்றி ஆராய முற்படும்போது இதற்கென குழப்பம் கண்டேனேயொழிய, மனமும் ஒரு நிலைப்படாது வழுக்கியது. அண்மையில் ஆங்கில வார இதழ் "Illustrated Weekly of India" வில் இரண்டு கட்டுரைகள் வந்தன. அவை காமகோடி பீடாதிபதி ஒரு பழம்பெரும் எழுத்தாளர் அவர்களுக்கு மனமுவந்து அளித்த கனிவான பதில்கள். இவற்றிடையே பல்வேறு வினாக்களுக்குப் பதிலிறுத்ததைவிட என்போன்றூரைப் பலநாட்கள் வாட்டிவந்த பெரும் குழப்பத்திற்கு விடையைக் கண்டேன். இத்தகைய நல்ல பயனுள்ள கட்டுரை ஆங்கிலத்தில் மட்டுமல்லாது பலபேர்களுக்குப் பயன்பட வேண்டுமெனில் தமிழில் இருப்பின் நலமென்று எண்ணினேன். அவ்வவாஉந்த ஆசிரியர் பெருமகனை அணுகினேன். அவரும் தமிழாக்கம் செய்ய அனுமதியளித்தார். எனது குறைகள் எனக்குத் தெரியமாட்டா. இதனில் குறை காணுவோர்

Koviloor Digital Library

எடுத்துக் காட்டல் வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கோள்கிறேன்.

இத்தகையதொரு காரியத்திற்கு, "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் பெருஞ்சொல்லிற்கு ஈடாக ஆங்கில மூலத்திறனை எழுதிய திரு. A. S. இராமன் அவர்கட்கு, என்னைத் தமிழாக்கம் செய்ய அனுமதியளித்து, தமிழாக்கத்தை அவரே பார்த்துத் திருத்தியமைத்து உதவிய அப்பெருந்தகைக்கு என் நன்றி என்றும் உரித்தாகுக.

ஆசாரிய சுவாமிகளிடம் பெரிதும் பக்தி கொண்டுள்ள எனது அருமை நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இந்நூலை வெளியிட முன்வந்து எனக்கு ஊக்கமூட்டியமைக்கு எனது உளங்கனிந்த நன்றி.

பல்வேறு பிரச்சினைகளுக்குப் பளிங்கம்போல் பதிலளித்து உலக குருவாய்த் திகழும் தவத்திரு சுவாமிகள் திருவடிகள் தொழுது, இதனை மக்கள் படித்து மனம் தேறுவார்கள் என்று இதனை அவர்கள் முன் வைக்கின்றேன்.

"ஆக்கியோன்"

Koviloor Digital Library

ஆசாரியசுவாமிகள் அருள்வாக்கு

மனிதருள் சிலர், தமது போக்கிலே, வெகு சுலப மாக, ஸ்ரீ சங்கராச்சாரியாரை இந்துக்களின் போப் பாண்டவர் என்று கூறிவிடுகின்றனர். ஆனாலும் இவ்விரு பெரும் பதவிகளிலும் பொதுப்படையாக வுள்ளது மிகக் குறைவு. உண்மையில் வேறுபாடு தரத் தில்தானிருக்கிறது, அளவில் அல்ல. இத்தோற்ற வேறு பாடுகள் அடிப்படைக் கருத்துகளில் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் புறத்தோற்றத்திற்கு ஒவ்வி வரலாம். தங்களுக்குள் அந்தரங்கமான மனவேறுபாடுகளும், அதனையடுத்துக் குரோத வேறுபாடுகளும், இந்துக் களின் சமுதாயத்திடையே இருப்பினும், எவ்விதம் ரோமன் கத்தோலிக்கர்கள் தங்களது போப்பாண்ட வரிடம், இறுகிய ஒற்றுமையுடன் அன்பு காட்டு கின்றனரோ அதுபோல இந்துக்கள் ஸ்ரீ சங்கராச்சாரி யாரிடம் அன்பு கொண்டுள்ளனர். கிருஸ்துவத் தோழர்

Koviloor Digital Library

கள் தங்கள் போப்பாண்டவரிடம் கொள்ளுவதைவிட இந்து பக்தர்களின் உள்ளம், இவ்வணக்கத்துக்குரிய தலைவரிடம், மிகுந்த வினயமும் பயபக்தியும் கொண்டவையாகக் காண்கின்றன. இந்துக்கள் அடிப்படையிலேயே மனதில் ஒருமைக் கோட்பாடுடையவர்களாதலின், தான் வணங்கும் தெய்வத்துடன் எவ்விதத் தயக்கமுமின்றி ஒன்றிவிடுகிருன்; அவ்வாறு ஒற்றுங் காலை தன் இனத்தின் தேவைகளைக்கூட மறந்து விடுகிருன். இதன் காரணமாகத்தான் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் ஈர்க்கும் சக்தி எங்கும் பரவி நிற்கிறது. குருவுக்கும் குருவானவனிடம் சைவர்களின் வழிபாட்டொருமை நன்ருகப் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்ருகும். ஆனுல் வைணவர்கள், மத்வர்கள், கடவுளைப்பற்றிய ஐயப்பாடு உடையவர்கள். ஏன் நிரீஸ்வரவாதிகளும்கூட இவர்களின் கொள்கையை எதிர்க்க வல்லவர்களல்லர். இந்து மத தர்மப்படி நிரீசுவரவாதமும் ஒப்புக்கொள்ளப் பட்டதொன்ருகும். மதக் கோட்பாடுகள், கட்டுதிட்டங்கள், (மதங்களின் எதிர் மறையான பொதுவுடமை உட்பட) பிடிவாதமான சித்தாந்தக் கொள்கை இவைகளைத் தனித்து, நற்பண்புகள் நிறைந்து, நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடன், திறந்த வார்கடலைப்போல, எத்தன்மையும் ஏற்றுக்கொள்ளும் இந்து மதத்தைப் போல் வேருெரு மதம் காண்பதரிது.

இவ்வுலகில் போப்பாண்டவர், ஜகத்குரு (உலகு ஆசிரியர்) சங்கராச்சாரியார் இருவருடைய மதபீடத்

Koviloor Digital Library

தலைமையில் எவ்விதக் காரியங்களிலும் முதன்மைத் தானமும் புறப் பகட்டுத்தன்மையும் கொண்டுள்ள ஒற்றுமை காணப்படுகிறது. இந்த இரண்டு மத பீடங்களும் காலப்போக்கில் அடைந்த மாறுதல்கள் மிகவும் விந்தைக்குரியது. இந்து மதத் தலைவரை அதன் காலத்திய ரோமன் கத்தோலிக்கத் தலைவரிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அம்மதத் தலைவர் தலைமை கொண்டுள்ள மதத்தின் பல்திறன் காரணமாக விருக்கிறது. இவர் தனது சக்தியையும் கௌரவத்தையும் இவரையொத்த மற்ற மூவருடன் பங்கிட்டுக்கொள்கிருர். ஏனெனில், இந்நாட்டில், ஒன்றல்ல, நான்கு ஜகத்குரு சங்கராசாரியார்களிருக்கின்றனர். இவர்கள் எல்லோரும் சமமான பெருமை கொண்டவர்கள். அவர்கள், ஆதிசங்கரர், அவர்களாலேயே நிறுவப்பட்டதென்று நம்பப்படுகின்ற மடங்களின் தலைவர்களான, தெற்கே சிருங்கேரி (மைசூர்), மேற்கே துவாரகா (குஜராத்), வடக்கே ஜோஷிமடம் (உத்திரப் பிரதேசம்), கிழக்கே பூரி (ஒரிஸ்ஸா) ஆகும். எல்லோருமே சமமான பெருமை கொண்டுள்ளார்கள் எனினும், சிருங்கேரியில் உள்ள சுவாமிகள்தான் முதன்மை ஸ்தானம் பெறுகிருர். ஏனெனில், ஆதிசங்கரரின் முதல் சிஷ்யரான பூர்வாஸ்ரமத்தின் மண்டனமிஸ்ரர் என்று பெயர் கொண்ட சுரேஷ்வராச்சாரியாரின் ஆன்மீக சிஷ்யராவார். இம்மடத்திற்குக் கர்ண பரம்பரையிலும் கால வழக்கிலும், கொடுக்கப்படுகின்ற இதன் தொன்மைக்

Koviloor Digital Library

கும் அதிகாரத்திற்கும் ஆதாரமாக எந்த தேதியும் நேர்முகச் சான்றிதழ்களும் காட்ட முடியாது.

இன்று எல்லாவிதத்திலும் இந்த நான்கு சங்கராச்சாரியார்களில் எவரும் ஐந்தாவது நிலையைக் கொண்டில்லை. இவர்தான் காஞ்சீபுரம் (சென்னை) காமகோடி பீடம் ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் ஆவர். இவர் தலைமை தாங்கும் இந்தப் பீடம்தான் எல்லாவற்றிலும் தொன்மை வாய்ந்தது என இவரது பக்தர்கள் கொண்டாடுகின்றனர். ஏனெனில், ஆதிசங்கரரின் அபிமான சிஷ்யரும், இளமையின் காரணமாக சுரேஷ்வராச்சாரியாரின் பராமரிப்பிலே விடப்பட்டவருமான சர்வக்ஞர் வரை இதன் பரம்பரை நீடித்துச் செல்கிறது. இது போன்ற வேறுபட்ட கருத்துகள் இந்த சங்கராச்சாரியாரில் எவரொருவரையும் முதன்மையானவர் எனக் குறிப்பிட முடியாமல் செய்கிறது என்றாலும், காஞ்சீபுரம் காமகோடி பீடாதிபதி மிகுந்த சக்தியுள்ளவர், அவரது புகழ் இந்துக்களின் மனதில் வளர்ந்து வருகிறது என்ற உண்மை மறுத்தற்பாலது. அவருடைய பெயரும் புகழும், அவர் பின்னால் இருக்கும் ஸ்தாபனத்தின் அளவையும் பெருமையையும்விட அவருடைய உருவகஜோதிக்குத்தான் என்று கூற முடியும். நிலையை இவ்வாறு கொள்ளலாம். சிருங்கேரியில் மடத்துக்குத் தலைமை தாங்குபவரைவிட மடத்துக்குத்தான் முக்யத்துவம் கொண்டுள்ளது. காஞ்சீபுரத்தில் மடத்தைவிட தலைமைக்குத்தான்

Koviloor Digital Library

ரொம்ப முக்யத்துவம். ஜோஷிமாத்திலும் பூரியிலும் மடங்களோ அல்லது தலைமை தாங்குபவர்களைப் பற்றியோ ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆர்தர் கோயிஸ்லரின் "தாமரையும் எந்திரம் போன்ற மனிதனும்" என்ற தலைப்பில் இந்தியாவைப்பற்றியும் சப்பானைப்பற்றியும் அவசரமாக எழுதப்பட்ட புத்தகத்தைப்பற்றிக் கொஞ்சம் கடுமை குறைவாகச் சொல்ல வேண்டுமானால் அது பொய்யும் அரைகுறை உண்மையும் மலிந்துள்ளது என்றுதான் கூறமுடியும். ஆனால் காமகோடி பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியாரைப்பற்றிய அத்தியாயத்தில் அவருக்கு இப்பொழுது இல்லாத பல்லக்கைப்பற்றி அடிக்கடி சொல்லப்பட்டிருப்பதைத் தவிர தகுதியற்ற பொய்மைகளும், பயனற்றவைகளும் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. காமகோடி சுவாமிகள் எப்பொழுதும் கால்நடையாகப் பிரயாணம் செய்கிறார். உண்மையில் அவர் நெடுந்தூரம் நடக்கிறார். அவருடைய பாத யாத்திரைகள் பிரசித்தமானவை. இந்த ஆசிரியரின் இந்துக்களின் தலைமைக் குருவைப் பற்றிய வர்ணனை மிகவும் மனதை வசீகரிக்கின்றது. இது, ஸ்ரீ சங்கராச்சாரியாரின் முன்னிலை எப்படி தற்பெருமையுடன் ஏளனம் செய்யும் பண்புடையோரையும் மின் தாக்குதல் போன்று மாறுதல் அடையச் செய்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. ஆசிரியர் கோயிஸ்லர் எழுதுகிறார்: "ஒரு புன்னகை. அது அவரது முகத்தைக் குழந்தையின் முகமாக மாற்றியது. இதற்கிணையான

Koviloor Digital Library

ஒரு புன்னகையையோ அல்லது முகபாவத்தையோ நான் இதுவரை கண்டதில்லை. அதிலே தனிப்பட்ட இனிமையையும் கவர்ச்சியையும் கண்டேன். பின்னர் எனது திரும்பும் பாதையில் மேல்நாட்டு சன்னியாசி களின் ஓவியங்களில் தவக்கோலத்திலோ, ஆசீர்வதிப் பது போலவோ, அல்லது உயிர் தியாகிகளாகவோ கண்டேனே ஒழிய இத்தகைய வசீகரப் புன்னகை யினைக் கண்டதில்லை. எல்லா சித்தர்களும் தங்களது அனுபவங்களை வார்த்தைகளில் சொல்ல முடியாது என்பது ஒற்றுமையுடன் ஒப்புக் கொள்ளப்படும் ஒன்றாயினும் அவர்களின் முகபாவங்கள் உளியால் செதுக்க முடியாததாயும் ஓவியமாய் எழுத முடியாத தாயும் இருக்கிறது. கல்வராய் என்னுமிடத்திலுள்ள ஒரு காட்சியும், அல்லது கடைசி விருந்துக் காட்சியும் எவ்வளவுதான் பாராட்டினாலும் உண்மையில் நாஸரத்தி லிருந்த ஏசுவைப்போல என்றும் என் உணர்வில் பட்டதில்லை. ஆனால் பண்டைய இந்தியாவின் கலாச் சாரத்தினைச் சேர்ந்த குப்தர் காலத்திய சிலைகள் அத்தகையதொரு தனிப்பட்ட புன்னகையை எடுத்துக் காட்டிற்று.''

பால்பிரண்டன் என்னும் ஆசிரியர் கீழ்க்காணும் வரிகளை எழுதும்போது, தவத்திரு அடிகளார் நாற்பது ஆண்டுகளைக் கடந்தவராகவிருந்தார்.

Koviloor Digital Library

ஆசாரியசுவாமிகள் அருள்வாக்கு

"எனது உள்ளத்திலுள்ள வடிவச் சாலையில் அவரது நீறுபூத்த பொன்னிற பெருமை பொருந்திய முகம் வணக்கத்திற்குரிய தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. தெய்வீகம் என்னும் பிரஞ்சுச் சொல்லின் முழு உண்மையும் அம்முகத்திற் காணப் பட்டது. அவருடைய புறத் தோற்றம் அமைதியும் அடக்கமும் கொண்டது. அவரது கருத்த பெரும் விழிகள் மிகவும் பெரிதும் பெருமையும் வாய்ந்தது. நிமிர்ந்த, அழகின் வெளிநிறைந்த சிறிய நாசி. கிறிஸ்துவ மடாலயத்தின் தலைமை தாங்கிய துறவிகளில் ஒருவருக்கு இத்தகைய முகம் மத்திய காலங்களில் இருந்திருக்கலாம். ஆனால் இவருடைய முகமோ அறிவுக் கனல் சுடர்விட்டு எழுகிறது. செயலாக்கப் பண்பு கொண்ட மேல் நாட்டினராகிய நாம் இவர் கனவுக் கண்களைக் கொண்டவராகக் காண்கிறார் என்று கூறுவோம். எப்படியிருப்பினும் இந்தப் பெரிய கண்ணிமைகளுக்குள் கனவுகளைவிட ஏதோவொன்று விளக்க முடியாத அளவில் புதைந்து கிடக்கிறது என்பதை நான் உணர்கிறேன்" என்று தனது "அந்தரங்க இந்தியாவில் தேடினேன்" என்னும் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

இன்று, முப்பதாண்டுகளுக்குப் பிறகு, தமது எழுபதாவது வயதினில், தவத்திரு காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார் தமது "உபாசாந்தப்" பரம்பரியப் பண்டினில் இனிமையும் தெய்வீகமும் கலந்து

Koviloor Digital Library

தோன்றும் உருவாகத் தோன்றுகிருர். அப்படி ஏதே னும் இருக்குமாயின், பிரகாசிக்கும் சூரிய சந்திரர்களைப் போல கண்களைக் கொண்ட அமைதியும் சாத்வீகமும் கொண்ட தோற்றப் பொலிவினுல் அவரது முகம் பெருந் தன்மையுடன் காணப்படுகிறது. நடுக்கடல் அமைதி யில் காலைக் காற்றைப் போலவும், குழந்தையின் புன்ன கையும், செயின்ட் பால் மாதா கோயிலின் கோபுரத்தின் கம்பீரமும், பெரிய கான்யானின் பீடுநடையும், அரித் துவாரத்தில் பாய்ந்து ஓடும் கங்கையைப் போலவும், எவரெஸ்ட் சிகரத்தின்மேல் காலையொளியைப் போலவும் அவரது பொலிவு நிறைந்த அழகான உருவம் நம் மிடையே நிலைத்து நிற்கிறது. ஆனுல் தவத்திரு அடி களாரின் தரிசனம் எவ்விதம் காண்பது? ஆனுல் உண்மை யில் அவரைத் தரிசிக்க விரும்புகிறவர்களுக்குக் காணக் கிடைக்காதவரல்ல. அவர் ஒருசமயத்தில் எங்கிருக்க நேர்ந் தாலும் அங்கு நடைபெறும் சடங்குகளிலும் சாங்கிய காரியங்களிலும் எங்கும் பரவி நிறைந்திருக்கிருர். அவர் இருக்கும் நிலை அங்கு அப்படியே நிலை பெறுகிறது. உடனே தூரத்திலிருந்தும் அருகிலிருந்தும் பக்த கோடி களின் கூட்டம் அவ்விடம் நோக்கிப்பாய்ந்து வருகிறது. அவருடன் சில வார்த்தைகளாவது உரையாட வேண்டு மென்று பலமணி நேரங்கள் காத்திருக்கவும் செய்கின்ற னர். ஆனுல் ஒவ்வொருவரிடமும். தனித்திருப்பதுஎன்பது அவருக்குத்தெரியும். ஆகவே, அவரது காலடியில் புஷ்பங் களையும் பழங்களையும் சமர்ப்பித்து, நமஸ்கரித்து, அஞ்சலி

Koviloor Digital Library

செய்கையில் வானத்துத் தாரகை போன்று எதிலும் சம்பந்தப் படாதவராகத் தனித்து நிற்கிருர். அவரது புன்னகை ஆம், உலக உத்தாரணத்திற்கான புன்னகை, கோயிஸ்லர் தன்னையும் மீறி வருணித்த புன்னகை, ஆழ்ந்த கருத்துக்கள் புதைந்த உண்மைகளைக் கூறு கின்ற உணர்ச்சி வயமான சிறிய உதடுகளை விட்டுப் பிரிந்ததில்லை. உணர்ச்சிப் பெருக்கின் ஆன்ம அறிவின் ஒளிமிகும் பிரகாசம் அவரது ஆழ்ந்த கருத்த கண்களிலே எப்பொழுதும் தங்கி "அபயமுத்திரையில்" (காப்பாற்றும் பண்புடைமை) அவரது வலக்கரம் திகழ்கிறது.உண்மை யில் அவர் பேசுவதில்லை. ஆனுல் அவரது இருக்கையே வெள்ளிடையாக இருக்கவில்லையா? அவரைச் சுற்றி யுள்ளவர்களிடம் அவர் தொடர்புகொள்ள விரும்பவில்லை யென்று கூறுவது அசம்பாவிதமாகும். ஆனுல் மற் றைய சுவாமிகளெல்லாம் இவரைவிட நவீனமாகவும் ஜனுயகமாகவும் இருக்கின்றனர். ஏதாவது காரணங் களுக்காக அரசியல் வாதிகளும் தங்களது வீடுகளுக் கழைத்தால் அதனை உடனடியாக ஏற்று, சிருங்கேரி மடத்துத் தலைவர் தவத்திரு சங்கராச்சாரியார் நிறை வேற்றி வைக்கிருர் என்று தெரிகிறது. ஆனுல் காம கோடி பீடாதிபதியின் ஜனுயகப் பண்பே வேறு.

தவத்திரு அடிகளாரைச் சந்திக்க வேண்டுமென்று, தனித்துச் சந்திக்க, ஐந்து தடவைகள் முயற்சிசெய் தேன். ஆச்சர்யவசமாக எனது முதல் முயற்சியே பலனை

Koviloor Digital Library

யளிக்கிறது. நான் அவர் முன்னிலையில் நின்றேன். என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. அவர் துவங்குகிறார். "என்னுடன் தனித்துப் பேச நீ விரும்புகிறாய் என்று எண்ணுகிறேன். இப்பொழுது பேச ஆரம்பிப்பாய்." அவர் பேசியது தமிழில். அவருடைய அன்பான அந்தரங்கமான பேசிய முறை உடனடியாக என்னைக் கொஞ்சம் தைரியமாக்கியது. ஆனால் எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"தவத்திரு பெருந்தகையே!"—என்னுடைய தமிழில் தான், மற்ற எந்தத் தமிழனும் புரிந்து கொள்ளமுடியாத தமிழில் பேசினேன். "நான் ஒன்றும் கேட்பதற்கில்லை. சாங்கியச் சடங்குகளாலும் கும்பல்களாலும் கலைக்கப் படாது தங்களை நான் கேட்க விரும்புகிறேன்."

"உனது தாய் மொழியென்ன?" என்னை ஆராயும் பாவனையில் கேட்கிறார். அப்பொழுதும் அவரது வழக்கமான புன்னகை அவரது உதடுகளில் தவழ்கிறது. "அது தமிழாக இருக்க முடியாது. எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

"தெலுங்கு, ஐயனே!"

"உனது பிறப்பிடம் எந்த ஊர்?" என்று அழகிய தெலுங்கினில், இன்று ஆந்திரப் பிரதேசம் எங்கிலும்

Koviloor Digital Library

பேசாத அளவு தெளிவாகக் கேட்டார். என்னுடைய இளமை வாழ்க்கை, பெற்றோர்கள், கல்வி, கலியாணம், உத்தியோகம், ஈடுபாடுகள் போன்றவைகளில் தனிப் பட்டவனின் நுணுக்கங்களை விவரமாகக் கேட்டு என்னைப் பேச வைத்தார். அடிக்கடி எனது வார்த்தை களில் தலையிட்டு அவசியமாகப் பேசி எங்களிருவருக் கிடையேயும் பொதுவான நண்பர்களிருக்கிறார்கள் என்று உறுதியளித்து வந்தார்.

இந்தச் சமயத்தில் ஒரு பக்தன் திடீரென்று தோன்றிக் கன்னடத்தில் உரத்துப் பேசுகிறார். தவத் திரு சுவாமிகளோ, அந்தப் பக்தனைவிட அழகான இனி மையான உச்சரிப்பில் கன்னடத்தில் பதிலிறுக்கிறார். இதற்குச் சற்று பிறகு மற்றுமொரு பக்தன் வந்து அவரை மலையாளத்தில் அழைக்கிறார்—பேசுகிறார். அந்தப் பக்தனுடைய ஆச்சரியத்திற்கேற்ப கம்பீரமாக மலையாளத்தில் தவத்திரு சங்கராச்சாரியார் சிறியதொரு பிரசங்கம் செய்கிறார். இன்னும் சில நிமிடங்கள் கழித்து ஒரு உள்ளூர் சமஸ்கிருத பண்டிதர் ஒரு கூட்டமான யாத்ரீகர்கள் பின்தொடர வருகிறார். தவத்திரு அடி களாரின் பேரில் அங்கு வந்தவுடனேயே அழகாக சமஸ் கிருதத்தில் ஒரு வாழ்த்துரையை தயாரித்து விட்டார். அழகான மலையருவியின் நீர் வீழ்ச்சியைப் போன்றது அவரது மொழி. அதிலே சமஸ்கிருதத்திலே வழக்கமாக

Koviloor Digital Library

ஸ்ரீ சங்கராச்சாரியார் அழகாகச் சொற்பொழிவாற்றுகிறார். தவத்திரு சங்கராச்சாரியாரின் தாய்மொழி கன்னடம் என்றெண்ணுகிறேன். ஆனால் என்றுமே புதிதாக ஒரு வருக்கு வேறு எந்த மொழி தவத்திரு சங்கரரின் தாய் மொழியாக இருக்க முடியாது. அதே சமயத்தில் அரசி யின் ஆங்கில மொழியினையும் சரியான உச்சரிப்புடன் உச்சரிக்கிறார். அவர் பதினேழு மொழிகளில் போற்றத் தகும் புலமை கொண்டுள்ளார். மாறுபட்ட கொள்கை யும் கருத்தும் கொண்டவர்களும் ஒப்புக் கொள்ளும் வகையில் வெளியெடுத்துச் சொல்லும் பான்மைகொண்ட உலகத்து வேதாந்த மீமாம்ஸ மேதைகளில் ஒருவர். தென்னிந்திய இந்துக்கள் அவர்மாட்டுக் கொண்டுள்ள ஆழ்ந்த பயபக்தியின் காரணமே, அவருடைய துறவுத் தன்மையே அவரது புலமையைவிட எடுத்துக்காட்டாகி நிற்கின்றது. ஏனெனில் அவர் உண்மையிலேயே துறவி களில் துறவியாவர்.

நாங்கள் எங்கள் தெலுங்கு சம்பாஷணையைத் துவங்குகிறோம். இப்பொழுது அவர் பேச வேண்டிய முறை. திடீரென்று அவர் மௌனியாகிவிட்டார். அவர் கண்கள் மூடியிருந்தன. மெள்ள அவரது விரல்கள் அவரது தாடியை மெல்ல வருடின. கடைசியில் அவர் பேசுகிறார்: "இப்பொழுது பார். இந்து மத தர்மத்தில் பல குறைகளிருக்கின்றன. அவைகளை அடுக்கிச் சொல்லிவிடலாம். ஆனால் அதன் நன்மைகளை ஆராய்ந்

Koviloor Digital Library

தால் வானத்து நட்சத்திரங்கள் போல் கணக்கிலடங்க மாட்டா.'' மறுபடியும் ஒரு இடையூறு. இப்பொழுது வந்தது வடநாட்டிலிருந்து வந்த யாத்ரீகர்கள்; அவர்கள் இந்தியில்தான் பேச முடியும். ஆனால் அவர்களின் உள்ளக் கிடக்கையால் நெகிழ்ந்துவிட்டார். அவர்களுடைய சொந்த மொழியிலேயே அவர் பேசுகிறார். அவர்கள் போகும்போது அவர்கள் முகத்தில் புதிய பொலிவு காண்கிறது.

''நான் இன்று அதிர்ஷ்டம் செய்யவில்லையென்று தெரிகிறது,'' என்று விரக்தியுடன் கூறினேன். ''வேறொரு சமயம் சந்தர்ப்பமளிக்க முடியுமாவென்று தவத்திரு சுவாமிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.''

''என்றைக்கும் எந்தச் சமயத்திலும்'' என்று கம்பீரமாகப் பதிலளிக்கிறார். ''நாங்கள் நாளை மறுதினம் மதுரைவிட்டுச் செல்வோம். நீ வசிப்பதற்கு ஒரு மைலுக்குள்ளாக நாராயணபுரமென்னும் ஊரில் இரண்டு மாதங்கள் தங்கப் போகிறோம். ஏன் அங்கு என்னைச் சந்திக்கக்கூடாது?''

''கண்டிப்பாக சுவாமிகளே. இப்பொழுது தங்கள் ஆசியுடன் உத்திரவு பெறலாமா?'' என்று வணங்கி அந்தக் கம்பீரமான காந்த சக்தி படைத்த உருவத்தின் முன்னின்று பின்வாங்கினேன். விண்வெளி வீரன்

Koviloor Digital Library

ஒருவன் தான் உணர முடிகின்ற மனப்பூரிப்புடன் நான் வெளிச் சென்றேன்.

தவத்திரு சங்கராச்சாரியாரை நாராயணபுரத்தில் பின்பு மூன்று முறை சந்தித்தும் எனக்கு மனநிறை வளிக்கவில்லை. காரணம் அப்பொழுதெல்லாம் சுவாமி களைக் கணப்பொழுதுதான் காண முடிந்தது. ஒவ்வொரு தடவையும் நான் ஐந்து மணி நேரம் காத்திருந்தும் தோல்வியுடன் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினேன் ஆனால் எனது ஐந்தாவதான கடைசி முறை நல்ல பய னளித்துவிட்டது. ஏனெனில், இச்சமயம், சுவாமிகள். என்னை ஆறுமணிக்கு மாலையில் கூப்பிட்டார். நான் பத்துமணிக்கு வெளிவரும்போது முகாமில் எல்லோரும் நித்திரையின் வயமாகி யிருந்தனர். எங்களது நான்கு மணிநேர நீண்ட தெலுங்கு உரையாடல் மிகுந்த ஆடம் பரமற்று சௌஜனிய முறையில் அமைதியாகச் சென்றது. எங்களைச் சுற்றிலும் முட்டைகளும் உக்கி ராண சாமான்களும் நிறைந்த கூடைகளும், குப்பை யுடன் கூடிய வெளிச்சம் குறைந்த உக்கிராண அறை யில் கூடினோம். சொல்லப் போனால் கரப்பான்கள், சுண்டெலிகளின் ஆதீனத்தில் பலாத்காரமாக நுழைந்து விட்டோம். எங்களுடைய உரையாடல் இருமுறை தடைப்பட்டது. ஒன்று அலங்கார தீபாராதனை கஜ பூஜையின்போதும் மற்றொன்று சுவாமிகளின் திரி தண்டத்தின்மீது ஒரு அணில் உட்கார்ந்து கொண்

Koviloor Digital Library

டிருந்ததை அவர் ஆச்சரியத்துடன் பார்த்தபோதும் குழந்தையின் களங்கமற்ற பார்வையுடன் அது அரிசி மூட்டைகளிடையே செல்வதை ஆர்வமுடன் பார்த்திருந்தார்.

"இது எனக்கு ஐந்தாவது தடவையான முயற்சி. சாந்தமாக எவ்வித இடையூறுமின்றிச் சுவாமிகளைச் சந்திக்கிறேன்." சுவாமிகள் எதுவும் சொல்லவில்லை. அவரின் சாதாரண சிரிப்பைத்தான் சிரிக்கின்றார்.

"சென்ற வாரம் இதற்கென தனியாக ஏற்பாடு செய்யப்பட்டதும் தங்களோடு 45 நிமிடங்கள் தங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது." மறுபடியும் பதிலிறுக்கவில்லை.

"அச்சமயம் கம்பீரமாக சுவாமிகள் நான் தங்களை என்றும் எப்பொழுதும் சந்திக்கலாம் என்று கூறினீர்கள்." சுவாமிகள் ஒன்றும் சொல்லாமல் உறுதி கூறும் புன்னகையுடன் காணப்படுகிறார்.

"அதிலிருந்து முகாமிற்கு நான் வந்துகொண்டு தானிருக்கிறேன். ஆனால் எனக்கு அதிர்ஷ்டமில்லை." இப்பொழுதும் ஒன்றும் சொல்லவில்லை.

"நான் சில கேள்விகள் கேட்க ஆசைப்படுகிறேன். சுவாமிகள் உத்திரவு கிடைக்குமா?"

KOVILOOR ANDAVAR
A. No. 16153
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

"கண்டிப்பாக."—கடைசியாக அவர் பேசிவிட்டார். அவர் பேசியது அந்தச் சுத்தமான இனிமையான தெலுங்கில்தான் பேசினார். "நான் உன்னை மறக்க வில்லை. உண்மையான சந்தேகங்கள் கொண்டவருக்குத் தான் எப்பொழுதும் நான் கிடைப்பேன். உண்மை யான வினாக்களில் எனக்கு விருப்பம் அதிகம்."

"நன்றி ஐயனே! எனது முதல் கேள்வி: நவீன இந்தியாவில் மத அடிப்படையில் வாழ்க்கை நெறி யினைப்பற்றிச் சுவாமிகளின் அபிப்பிராயம் என்ன? நம் மிடம் சடங்குகள் சாங்கியங்களை முதற்கொண்டு இருப் பினும் இந்தியர்களாகிய நாம் ஐரோப்பியர்களையும் அமெரிக்கர்களையும்விட அடிப்படையில் காம்யவாதி களாகவில்லையா?" வெளிப்படையாக எவ்வித உணர்ச்சி களையும் வெளியிடவில்லை அவர். அவருடைய இந்த மௌனத் தன்மை என்னைச் சற்று குழப்பியது. 'இந்தக் கேள்வி சரியான முறையில் இல்லையா? ஒருவேளை எனது வினாவில் வினயக் குறைவு கண்டீர்களா?' ஏதோ சிந்திப்பது போலவும், என்னைக் குழப்புவது போலவும் அவர் கூர்ந்து நோக்கினார்.

மிகவும் சாந்தமாக, "நான் மொத்தமாக எத்தனை கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும்?" என்று கேட்டார்.

Koviloor Digital Library

ஆசாரியசுவாமிகள் அருள்வாக்கு

"நான் தயாரித்துள்ள வினுப் பட்டியல் சற்று நீளமா யிருக்கும் என்று அஞ்சுகிறேன். தங்களுடைய நேரத் தையும் பொறுமையையும் சற்று சோதிக்கும் எனவும் அஞ்சுகிறேன்."

"பரவாயில்லை. மேலே செல்லவும். எல்லாக் கேள்வி களையும் முதலில் படித்துவிடு. கடைசியில் எனது பதில்களெல்லாம் ஒரு முடிவான, உனது கேள்விகளுக் கெல்லாம் விடையாக, வாக்காகும்."

அவர் சொன்னபடியே நான் செய்கிறேன். கேள்வி களையெல்லாம் வாசித்தபின் .அவருடைய குறிப்புரைக் காக, நிதானமற்றுக் காத்திருந்தேன். ஆனால் மறுபடி யும் என்னைச் சோதிப்பதுபோல் அவர் மௌனமாக விருந்தார். அவர்கள் கண்கள் மூடியிருந்தன. அவர் இதில் ஆர்வமற்றதான தோற்றம் காண்கிறது. மறு படியும் ஏதோ ஞாபகத்தில் தனது தாடியைத் தடவு கிறார். அவரது முகத்தில் திடீரென பொலிவு காண் கிறது. அவரது உதடுகள் விரிந்து சில வார்த்தைகள் மெல்ல வெளிவருகின்றன. அதை என்னால் கேட்க முடியவில்லை. மெல்ல திரும்பச் சொல்லும்படி கேட்டுக் கொண்டேன். தனது காவி மேலாடையைச் சரிசெய்து கொண்டு தன்னைத்தானே நிமிர்ந்துகொண்டு, "இந்தக் கேள்விகளைத் தயாரிக்க எத்தனை நாட்களாயிற்று. இது மிகவும் பரந்துள்ளது. நான் இதற்குப் பதிலளிக்க முயற் சிகள் செய்கிறேன்" என்று கூறினர். ஒரு துறவியின்

Koviloor Digital Library

உணர்வுப் பெருக்குடனும் கருத்தாழத்துடனும் நான்கு மணி நேரங்கள் நான் பேசினேன். உரையாடலின் முடிவில் என்னுடைய கேள்விகளுக்கெல்லாம் முடிவாகவும் பதிலளிக்கப்பட்டிருந்தன. என்னுடைய கேள்விகளையும் அவருடைய குறிப்புரைகளையும் சரி செய்து ஒரு தொடர்ச்சி இருக்கும்படியாக கீழே கொடுக்கிறேன்.

மத அடிப்படையில் நான் கேட்ட முதல் கேள்வி நவீன இந்தியாவில் மத வாழ்க்கையைப்பற்றி. தவத்திரு சங்கராச்சாரியாரின் பதில் இதுதான்:

"மதம் நமது நாட்டில் ஒரு சக்தியாகத் திகழ்வதை யாரும் தடுக்க முடியாது. மேலெழுந்தவாரியாக நாம் காமியவாதிகளாகக் காணலாம். ஆனால் முழுமையிலும் நாம் மதத்தின் அடிப்படையில்தாம் இருக்கிறோம். நமது அரசியல் வாதிகளும் உலகச் சார்பான காரியங்களுக்கு மதத்தைத்தான் எடுத்தாண்டு கொள்கிறார்கள். மக்களின் இருதயத்தைக் கவர காந்திஜி எவ்விதம் புத்தி சாதுர்யத்துடன் மதத்தை உபயோகப்படுத்தினார் என்பது நினைவிருக்கிறதா? மதத்தின் பெயரால் நமது பாமர மக்களை எதுவும் செய்யச் செய்துவிடலாம். நாடு பிரிவினை கண்டவுடன் எவ்வளவு லட்சக்கணக்கான இந்துக்கள் தங்களை உயிர்ப்பலி கொடுக்க நேர்ந்த சம்பவங்களைத் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன். துன்பத்தில் உழல்வதைவிட சாவினை

Koviloor Digital Library

அவர்கள் மேலெனக் கொண்டனர். மத்திய கால ஐரோப்பாவில் நடைபெற்ற மதப் படுகொலைகளைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது, நமது நாட்டில் பிரிவினையின் காரணமாக ஏற்பட்ட மதச் சண்டைகளாகும். ஐரோப்பாவில் தனிப்பட்ட தியாகிகளைப் பற்றித் தான் கூறுகிறது வரலாறு. இந்தியாவில், மதத்திற்கு எதிர்ப்பு தோன்றினால் சீர்திருத்தவாதிகளல்ல, அறிஞர்களல்ல, பாமர மக்கள் தங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றிக்கொள்ள எழுந்துள்ளனர். இந்துக்களின் மதாபிமானத்தின் மற்றொரு சான்று வேண்டுமா? ஏதோ ஒரு புண்ணிய ஸ்தலத்திற்குப் புண்ணிய தினத்தன்று முயற்சி செய்து சென்று உன்னுடைய அயல்நாட்டு நண்பர்களையும்கூட அழைத்துச் செல். அங்கு உண்மையிலேயே ஒரு திருவிழாச் சந்தையினைக் காண்பாய். இத்தகைய காட்சி ஆண்டு பூராவும் புண்ணிய நதிகளின் கரையில். உனக்காகக் காத்திருக்கிறது. இந்த நாட்டிலுள்ள மக்களைச் சாதாரண ஸ்நானத்தால் வரும் பலன் எப்படி அசைக்கிறது என்பது உனக்குத் தெரியுமா? இந்தியாவொன்றில்தான் இன்னும் கும்பமேளா நடந்துகொண்டிருக்க முடியும். நமது காமியார்த்தப் பணிகள்மீதுள்ள ஆர்வம் வளர்ந்து கொண்டிருந்த போதிலும் இன்றுகூட நமது நாட்டில் மதவுணர்வு தான் மக்களின் அன்புக்குக் கட்டுப்படுகிறது. நம்மில் ஒவ்வொருவரிடையேயும் அது ஆழ்ந்து நிலைத்திருக்கிறது.”

Koviloor Digital Library

கேள்வி : என்னைப் பொறுத்த வரையில் நமது தலைவர்கள், சமயச் சார்பற்ற தன்மையிலும் சமதர்மக் கொள்கையிலும் அதிகமான ஆர்வங்காட்டி வருவது பொது மக்களிடையே சந்தேகத்தின் வித்துக்களை விதைப்பது போல் தோன்றுகிறது என்று எண்ணுகிறேன். தங்களுக்கும் அப்படிப் படவில்லையா? அவர்கள் வாழ்க்கை நிலையில் ஒரு சூனியத் தனத்தை உண்டாக்குவதுபோல் தோன்றவில்லையா?

தவத்திரு சுவாமிகள் : நமது அரசாங்கங்கள், மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி உண்மைக் கொள்கைப் பற்றுடன் சமயச் சார்பற்று இல்லை. ஆனால் இந்து மதத்தின்மீது குரோத மனப்பான்மை கொண்டுள்ளது என்று சற்று நிதானத்துடன் நான் எண்ணுகிறேன். அவர்கள் பெரும்பான்மை சமுதாயத்தினை விட்டு மதச் சார்பில் சிறுபான்மையினர் நலனில் பாதுகாப்பளிக்க மிக்க ஆர்வம் கொண்டுள்ளனர். இப்பெரும்பான்மையினரின் மீதுதான் வரம்பற்ற சட்டங்கள், கலியாணம், மணவினை ஒதுக்கல், வார்சுரிமை, கோயில்கள் வழிபாட்டு முறை போன்றவைகளின் பக்கம் திருப்பப் பட்டுள்ளது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம்கூட இந்துக்களுக்கெனத் தனித்துத்தானிருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் எண்ணிக்கை மூன்று சதவிகிதம் குறைந்துள்ளது. இந்த எண்ணிக்கையை இசுலாமிய சனத்தொகை ஐந்து சதவிகிதம் உயர்ந்துள்ளதை

Koviloor Digital Library

ஒத்திட்டுப் பார்! குறிப்பாக அஸ்ஸாமில் இசுலாமிய சனத்தொகை அதிகமாகவிருக்கிறது. வெளிப்படையாகப் பார்த்தால் நமது சட்ட மன்றத்தினர்கள், இசுலாமிய அல்லது கிருத்துவ சமுதாய மத அடிப்படையில் எவ்வித மாற்றமும் செய்ய ஆசைப்பட்டதில்லை. ஆனால் இந்து மதத்தின் அடிப்படையை உடைத்தெறிய எப்பொழுதுமே தயாராய் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆசிய நாட்டிற்கும் ஒரு அரசாங்க மதம் என்பது உண்டு. இலங்கை, பர்மா, பாகிஸ்தான், மலாயா முதலிய நாடுகளுக்குத் தனி மதம் உண்டு. ஆனால் இந்தியாவுக்கு அதுவுமில்லை. இந்துக்கள் தங்களுக்குள் பயங்கரமாகப் பிரிந்திருப்பதால், பலமற்று இருப்பதால், நமது அரசியல் வாதிகளின் சமயச் சார்பற்ற தன்மை இந்துக்களை நோக்கித்தான் திரும்பியிருக்கிறது. அவர்களுக்கென தலைமையில்லை. ஆதலின் இந்து சமயத்தை நாட்டின் சமயமாக ஏற்றுக்கொள்ள பாராளுமன்றத்திற்கு யார் சிபார்சு செய்ய முடியும். முஸ்லீம்கள், கிருத்துவர்கள், பார்ஸிக்கள் மற்றும் சிறுபான்மையோர் தங்களுக்குள் நல்ல கட்டுப்பாட்டுடன் இருப்பதால் சக்தி வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். எப்பொழுதாவது இந்துக்கள் தங்கள் சமுதாயத்தைக் கட்டுப்பாட்டுடன் ஒருமைப் படுத்த எண்ணினால் அவர்களைச் சமய வெறியர்கள் என்று பெயரிட்டும் அவர்களது அமைப்பைத் தடை செய்யவும் ஆரம்பிக்கின்றனர். இவ்விதக் காரணத்தால் இந்தப் பெருமபான்மை சமுதாயம் மீட்க முடியாதபடி

Koviloor Digital Library

ஒழுக்கம் கெட்டிருக்கின்றனர். இந்து சமயத்தைப் பொறுத்த வரையில், நமது ஆட்சியாளர்கள் பிரிட்டிஷ் வைசிராய்கள் இருந்ததைவிடப் பெரும் தடையாகவிருக்கின்றனர். நமது தலைவர்கள் மத சிறுபான்மையாரிடம் விட்டுக் கொடுக்கும் கொள்கையையும் இந்துக்களுக்குத் துன்பத்தைக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையையும் கொண்டுள்ளனர். என்னுல் அவர்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கையில் இந்து மதத்தின் தொடர்பு தேய்ந்து வருகிறது. ஆனாலும் அவர்கள் மதத்தை வெறுத்து ஒதுக்க முடியவில்லை.

கேள்வி : வர்ணாசிரம தர்மம் இன்னும் இருந்து வருவதற்கு சுவாமிகளின் நியாய வாதங்கள் எவை? இந்தப் பயங்கரமான கால மயக்கம் சீர்திருந்தவோ அல்லது திருந்தவோ வழி கொடுக்குமா?

சுவாமிகள் : வர்ணாசிரம தர்மத்தில் நல்ல ஆதாரமானவைகளும் அதனின் குறைபாடுகளும் இருக்கின்றன. இது உலகத்தின் பண்டைய வாழ்க்கை நெறியைக் காட்டுகிறது. இன்றுவரை அதன் வளம் காரணமாக அது நன்றாக நிலைத்திருக்கிறது. எல்லா நாகரிகங்களின் அழிவுக்கும் அடிப்படைக் காரணம் சுயநலம் தான். அதுதான் போட்டி மனப்பான்மை, பிறரிடம் தலையிடுதல், பிறரைச் சுரண்டல், முடிவில் துண்டுபட்டு அழிந்துபடுதல் முதலியவற்றிற்கு, ஏழைகள் செல்வந்த

Koviloor Digital Library

னுக்கு வழிபடுதல், படியாதான் படித்தவனுக்கு, சாதாரண மனிதன் வசதி படைத்தவனுக்கு, நம்பிக்கையுள்ளவன் நம்பிக்கையற்றவனுக்கு, வழி விடுவதற்குக் காரணமாகியிருக்கிறது. ஆனால் இந்துக்களின் வர்ணாசிரம தர்மமோ, முதலில் கண்டுபிடித்து அமைத்தபடி, இத்தகைய கெடுதலான மனப் பண்புக்கு ஆதரவு கொடுத்ததில்லை. ஆனால் அதற்கு எதிர்மறையாக அதனை வெகுவாகக் கண்டிக்கிறது. அப்படியில்லையென்றால், கடந்த 5000 ஆண்டுகள் காலத்தில் இருந்த புயல் காற்றெனத் தோன்றிய ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து இன்றும் நிலைத்திருக்க முடியாது. அதன் மூலம் வழிகாட்டும் கொள்கையாவன: "வாழு வாழவிடு." அதனுள்ளிருக்கும் உருவாக்கும் ஒருமைப்பாட்டுப் பண்பிலும், கூட்டுறவுடன் தனித்தியங்கி ஒன்றுகும் பண்பிலும்தான் வற்புறுத்தப்படுகிறது. ஒவ்வொரு பகுதியும் தன்னைத்தானே வலுப்படுத்திக்கொண்டு தனக்காக வேண்டி எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தூரம் இந்து சமயம் முழுமைக்காகவும் வலுப்படுத்திக் கொள்கிறது. பிரிவினையால் ஒற்றுமை—இதைத்தான் நமது வர்ணாசிரம தர்மத்தின் மூலம் நாம் பூரணமாக அடைந்துள்ளோம்.

சாதாரணமாக, இன்றுகூட, காலங்கடந்த வாழ்க்கைமுறை இந்நாட்டில் தொடர்ந்துதானிருக்கிறது மாநிலத்திற்கு மாநிலம், சில சமயங்களில் மாவட்டத்

Koviloor Digital Library

திற்கு மாவட்டம் மொழிகள் மாறுகின்றன. வர்ணுசிரம அடிப்படையில் இந்த நாட்டிலுள்ள இந்துக்கள் ஒரு பொதுவாழ்க்கை நெறியைக் கைக் கொள்கின்றனர். இது பல நூற்ருண்டுகளாகத் தெய்வீக அன்பு வளர் வதற்கு உதவியாக விருக்கிறது. மறுபடியும் சொல் கிறேன், வர்ணுசிரம தருமம் ஒவ்வொரு இந்துவி னுள்ளும் சாந்தம் பொறுமைப் பண்பும் வளர்க்கிறது. மற்றைய மூன்று வர்ணங்களுக்கும் எவை நியாயமான தேவைகளாக இருக்கிறதோ அதைப் பறிக்கும் பண்பு கொள்ளாது, அந்தந்த வர்ணத்தின் பான்மையை நிலை நாட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதுதான் அதன் சுவதர்மம். உதாரணமாக பிரம்மன் ஏழையாகவிருக் கலாம். ஆனுல் வைசியனுடைய செல்வத்தை அபகரிக் கும் எண்ணம் எதுவுமில்லை. அதே மாதிரி வைசியன் எவ்வளவுதான் செல்வந்தனுனுலும் க்ஷத்திரியனின் சிம்மாசனத்திற்கு ஆசைப்பட்டதில்லை. மதம், வேதாந் தம், கலை, கல்வி இவைகளில் அடைந்த மாபெரும் முன் னேற்றத்தின் அடிப்படையில் உள்ளுணர்வுகளின் ஆரம்பத்தை ஆராய்ந்தால் அது வர்ணுசிரம தருமத் திற்குச் செல்கிறது. இன்று வர்ணுசிரம தருமம் இந்து தருமத்தில் அமைப்பில் இருக்கிறதேயொழிய செயலில் இல்லை. இதனுல்தான் முரண்பாடு. ஒரு காலத்தில் அதன் மூல பலத்திற்குக் காரணமாயிருந்தது பிரிவினை தான். ஆனுல் இன்று அது ஒற்றுமையின்மைக்குக் காரணமாகவிருக்கிறது. இது மிகவும் கயமைத்தனமாக

Koviloor Digital Library

ஒதுக்கல் கொள்கைதான் காரணம். இதன் முடிவு மிக துக்ககரமானது. இன்று நான்கு வர்ணங்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் தனிப்பட்ட தன்மையில் அல்ல, ஆனால் அழிவுத் தன்மையுடையனவாயிருக்கிறது. இதனால் வர்ணாசிரம தர்மத்திற்கு வெளியில் உள்ளவர்கள் இதில் சந்தோஷப்படுவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஒவ்வொரு வர்ணமும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அதனால்தான் பிராம்மணர்கள்கூட கிறிஸ்துவ மத மாற்றக்காரர்களுக்கு வேண்டிய அளவு உதவியாகி இருக்கின்றனர்.

பண்டைய காலங்களில் பிராம்மணர்கள் இந்துக்களின் ஆத்மீகத் தலைவராகத் திகழ்ந்தனர். அப்பொழுது உண்மையில் வழக்கிலிருந்தது பிராம்மணீயம். ஆனால் இந்து சமயம் அல்ல. ஆனால் தற்காலத்தில் வர்ணாசிரம தர்மத்தில் கடைநிலையில் உள்ளவர்கள் பிராம்மணர்களிடமிருந்து. ஆன்மீகத் தலைமையைப் பறித்துக் கொள்ள ஆவலாயுள்ளனர். பொறாமை, ஆணவம், பொறுமையின்மை இவை மூன்றும் ஒவ்வொரு வர்ணத்தின் அடிப்படையிலும் போரிட ஆரம்பித்துள்ளது. பிரம்மன், வைசியன், க்ஷத்திரியன், சூத்திரன் இவர்கள் எல்லோரும் எப்பொழுதும் ஒரு உள்நாட்டுக் கலகத்திலிருக்கின்றனர். இன்று, என்னைக் கேட்டால் வர்ணாசிரம தர்மத்தை, ஒற்றுமை குலைவுக்குக் காரணமாயிருக்கின்

Koviloor Digital Library

றவர் பிராம்மணர்தான் என்று சொல்வேன். ஏனெனில் மற்றைய வர்ணத்தாரினிடம் பிரம்மன் மரியாதை பெறுவதில்லை. அவன் அவர்களிடையே நம்பிக்கையை வளர்க்கவில்லை. ஆன்மீகத் துறையில் சமுதாயத்தைத் தலைமை தாங்கி நடத்த ஆற்றலில்லை. ஒரு காலத்தில் பொருளாதார நிலையில் கடை நிலைக்கும், ஆன்மீகத் துறைக்கு உச்சிக்கும், அறிவாற்றலில் திறன் பெற்ற வருக்கும், ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினான்.

எளிய வாழ்க்கைக்கும் உயர்ந்த எண்ணங்களுக்கும் நற்சான்ருக விளங்கினுன். அவன் ஏழ்மையிலிருந்தாலும் கூட உலகம் போற்ற வாழ்ந்தான். எவ்வளவு குறை வானுலும் அவனுடைய மறைவு கிராமத்தாரால் மிகவும் வெகுவாகக் கருதப்படுகிறது. அவனுடைய வீடு ஒரு ஆசிரமத்தின் தோற்றத்தையும் உணர்வையும் காட்டிற்று. அவன் எவ்வளவு உயர்ந்த எடுத்துக்காட்டாக வாழமுடியுமோ அவ்வளவு உயர் பண்புடன் வாழ்ந்தான். ஏனெனில் இவ்வுலகு அவனை நோக்கி நிற்பதை நன்குணர்ந்திருந்தான். சமுதாயத்தின் ஆன்மீகத் தலைவனுய் இருந்த காரணத்தால் மற்றைய வர்ணத்தாரிடையே நன்மதிப்புடன் திகழ அவன் எப்பொழுதும் தியாகங்கள் செய்யத் தயாராகவிருந்தான்.

ஆனுல் இன்றைய பிராம்மணர்களோ தங்களது பொறுப்புக்களை உணர்ந்தவர்களாக இல்லை. தனது மூதாதையர் அனுபவத்தில் கண்ட பெரும் கருத்துக்

Koviloor Digital Library

களை எடுத்துப் பிரச்சாரம் செய்யும் தகுதியும் இல்லை. அ·வனை வைசியனிடமிருந்தோ, க்ஷத்திரியனிடமிருந்தோ, அல்லது சூத்திரனிடமிருந்தோ பிரித்துக் காட்டுவது மிகக் கடினம். இதனுல் சாதாரணமாக சமுதாய ஏணியின் அடிப்படையிலுள்ளவர்கள் பிராம்மணர்களுடன் சம நிலையடைய கிளர்ச்சி செய்து கொள்வது நியாயம் என்று உணர்வு கொள்கின்றனர். இவர்கள் எல்லோரும் கடைசியில் அணு அணுவாகப் பிரிந்து, பொய்மை பெருகி, உருத்தெரியாதவாறு வர்ணுசிரம தருமம் உடைபட்டுப் போய்விடும்.

இதற்கு நிவாரணம் என்ன? வர்ணுசிரமற்றுப் போதலா? ஒரு பெரும் நல்ல எண்ணமாகும் முடிவு காண வேண்டும். வர்ணுசிரம தர்மத்தின் கெடுதல்களைக் களைவதன் நிவர்த்தி அதன் அமைப்பிலேயே இருக்கிறது. பிரம்மன் மட்டும்தான் இந்த ஆச்ரமத்திற்குப் புத்துயிர் அளித்து அதனுடைய மூல ஆதி அழகிற்குக் கொணர முடியும். அவனுக்கு நான் சொல்லக்கூடியது ஒன்றுதான்: "நல்ல பிரம்மணுகத்தான் அவர்கள் வாழட்டும். பிற வர்ணத்தாரும் உங்கள் வழி பற்றட்டும். அவர்கள் உங்கள் நல்லவற்றை ஏற்றுக்கொள்ளட்டும். கெட்டவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம். மன வடக்கம், தன்னடக்கம், வேண்டுமென ஏற்றுக்கொண்ட வறுமை, இவை போன்ற தெய்வீகக் கோட்பாடுகள் உங்கள் முன்னேர்கள் காப்பாற்றியிருந்தனர். அவர்கள்

Koviloor Digital Library

செய்தது போல் நீயும் செய். அப்படிச் செய்தால்தான் மற்றைய வர்ணங்களுக்குத் தூண்டு கோலாகி இந்து மதக் கோட்பாட்டில் ஒற்றுமை காணப்படும்." எவ்வித நிலையிலும் தெய்வீகக் காரியங்களைப் பொறுத்தவரையில் அவன் எந்தவிதமாகச் சலுகையும் சமரசமும் கூடாது. உண்மையில், அவன் பெரும் தியாகங்கள் செய்யவேண்டியிருக்கிறது. தலைமை யென்பதிலே நன்மைகளிருப்பது போல் பொறுப்புகளும் இருக்கின்றன என்பதை அவன் உணரத்தான் வேண்டும். வர்ணாசிரம தருமத்தின் அந்தரங்க மூலபலம் பிரம்மனுடைய தியாகத்தன்மையும், தன்னலமற்ற தன்மையிலும்தானிருக்கிறது. அப்படியில்லையென்றால் நமது மதம் அவன்மீது விதித்திருக்கும் விவரமான, மனக் குதூகலிக்கும் ஆசாரப் பண்பிற்கு என்ன செய்வது? இத்தகைய நிலையை பிரம்மன் ஒருவன்தான் காப்பாற்ற முடியும்.

கேள்வி : இன்றைய அழிந்த இந்து சமுதாயத்தை மதத்தின் அடிப்படையில், எம்முறையைக் கையாண்டால் உத்தாரணம் செய்யப்பெறும்?

சுவாமிகள் : எது முக்கியமென்றால் மக்களின் ஆசார நற்பண்பை உயர்த்துவதுதான். மக்கள் நற்குண நேர்மைத்தனமான வழிகளில் செல்ல வேண்டுமென்ற உள்ளுணர்வு மனிதனுக்கு இல்லையென்றால் எல்லாவித சட்டங்களும் திருத்தங்களும் பயனற்றதாகிவிடும்.

Koviloor Digital Library

குழந்தைகளின் எதையும் ஏற்கும் பண்புடைய மனி தனில் பதியும்படியாகப் பள்ளியிலும் வீட்டிலும் நல் வழிமுறைகளைப் பதிய வைக்க வேண்டும். வைத்தியத் திலோ விஞ்ஞானத்திலோ, பயிற்சி பிறகு தரலாம். மாணவனின் நடையுடை பாவனை குணநலப் பண்புகள் இவைகள்தாம் முதலிடம் பெறவேண்டும். என்னுடைய இளமைக் காலத்திலிருந்தது போல, என்று கல்வி பயனுள்ளதாயும் தெய்வீகத்திற்கு ஏற்றதாயும் ஆகிறதோ அன்று சமுதாய குலாசார சீர்திருத்தத்திற் காக மக்களிடையே சட்டமியற்றுதல் தேவையற்றதாகி விடுகிறது. நல்ல குணநலப் பண்புகளை வளர்க்க சட்டத்தை நாடும், நமது தலைவர்களின் எண்ணங்கள் குழப்பத்திலும், வக்கீல்களின் பைகளை நிரப்பும் கருவி யாகும். பருத்து வளரும் சட்டப் புத்தகங்களிலடங்கும் வெறும் சட்டங்களாகிவிடும். பண்டைய நாட்களில் நல்வழிப் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்குக் கட்டாயமாகவிருந்தன. தற்காலத்திலோ, மாணவர்கள் குணநல பண்புகள் வளரும் வகைக்கு எதுவும் செய்யாத பல்வேறு பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பள்ளிகளில் பரிசுகள் வழங்கப்பெறுகின்றன. குணமும், நற்பண்பையும்விட வாழும் வகை தேடுவதுதான் முக்கியமாகக் கருதப்படுகிறது. பாராளுமன்ற சட்டங்க ளன்றி, நமது மதாசாரப் புத்தகங்களில் உள்ள உயர்ந்த கருத்துகள் மாணவர்களின் நடத்தையைச் செம்மைப் படுத்துவதுதான் நல்லது.

Koviloor Digital Library

கேள்வி: தனிமனிதனின் மதவாழ்க்கையில் சடங்குகளின் நிலையென்ன? உதாரணமாக அவனுடைய நற்செய்கை தீச்செயல்களின் மீது அவைகளுக்குத் தொடர்புண்டா? ஒருவன் நல்லவனுகத் திகழக் கடவுளிடம் நம்பிக்கை வைக்க வேண்டுமென்ற கட்டாயமா? ஒரு நல்ல மனிதன் உண்மையிலேயே மதாசாரமுள்ளவனுக இருக்க வேண்டுமா? மதத்திற்கும் குணநலப்பண்பிற்கும், கடவுளிடம் அச்சத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றிச் சுவாமிகளின் அபிப்பிராயத்தை யறிவதில் ஆர்வமுள்ளவன். கொள்ளையரும் கொடுஞ் செயல் புரிபவரும் தங்களது இஷ்ட தெய்வங்களிடம், தங்களது சமுதாய விரோதக் கொள்கைகளுக்கு வெற்றி தேடி வரம் கேட்கின்றனர்.

சுவாமிகள்: மனிதனின் அந்தரங்கத் தோற்றத்திற்குச் சடங்குகள் முக்கியமில்லை. ஆனுல் அது அந்தத் தனி மனிதனுடைய தெய்விகப் பண்பினைப் பொறுத்துள்ளது. ஆனுல் சாதாரண பக்தன் குறிப்பிடப்பட்ட எல்லாச் சடங்குகளையும் மறுதளிக்காது அப்படியே கடைப்பிடித்தால் நலம். ஏனெனில் அது, வேறெது இல்லையெனினும், ஒருமுகப்படுத்தும் பண்பினைக் கொண்டது. ஒருமுகப்படுத்துதல், நல்லொழுக்கம், மன வலிவு, நற்பண்பும் எளிமை இவையெல்லாம்தான் ஒருவனுடைய தெய்வீகக் குணநலப் பண்பின் அடிப்படை. மதமும் நன்னடக்கை நெறியும் ஒன்றுக்கொன்று சார்பும்

Koviloor Digital Library

தொடர்பும் கொண்டதில்லை. புத்தரும் மஹாவீரரும் தெய்வங்கள்மீது நம்பிக்கையற்றவர்கள்தாம். இருந்தாலும் அவர்கள் நேர்மையும் நன்மையும் கொண்ட பாதையில் சென்றனர். வேதங்களுக்குட்பட்டவர்களில் நிரீஸ்வரவாதிகள் உள்ளனர் — அவர்கள் சாங்கிய வேதாந்திகள். கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதை விட அவர்களுக்கு செய்கருமத்தில்தான் அதிக ஆர்வம். களங்கமற்ற நல்லொழுக்கம், தனிமனிதன் தனக்குமுன் ஒரு கோட்பாடுடன் வாழ்ந்தால்தான், கொண்டு வாழ முடியும். அவன் அக்குறிக்கோளின் கீழ் மூழ்கி தனது வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்கிறான்.

மனிதனின் உள்ளப் போராட்டத்தின் வழி முறை முடிவாகக் கடவுள் நிற்கிறார். மற்ற நாடுகளைவிட இந்தியாவில் அனேகத் துறவிகள் இருக்கின்றனர். நமது மத சம்பந்தமான இலக்கியங்களைச் சற்று எண்ணிப் பார். அவனிடம் குறையீடுகள் உள்ள காரணத்தால் மனிதனே மனிதனின் குறிக்கோள் மையமாகவிருக்க முடியாது. இதனால் தனது நல்லொழுக்க உயர்வுக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் இதனை விட பலம் வாய்ந்த சக்தியொன்றில் நாட்டம் கொள்கிறான். புத்தர் அஹிம்சை என்னும் கொள்கையை நாட்டினார். அது காரியத்தில் கடவுளுக்குப் பிரதியாயிற்று. ஆனால் இன்று பௌத்த நாடுகளில் என்ன காண்கிறோம்? வேண்டத்தகாத விதங்களில் எல்லாம்

Koviloor Digital Library

மாமிஸ பக்ஷணிகள். அவர்கள் அஹிம்சையைப் பற்றி உணர்ச்சியுடன் எண்ணுவிடினும், உள்ள சொல்படி கொண்டாடத் தாங்களே மிருகங்களைக் கொல்வதில்லை. ஆனல் அவர்கள் நமது கீழ்க்கரையிலிருந்து கொலைஞர் களை வருவித்துக் கொள்கிருர்கள். ஆகவே கடவுளைப் போன்ற ஒரு களங்கமற்ற கொள்கைப் பொருளைக் கைக் கொள்ளவில்லை யென்ருல மனிதன் தனது நல்லொழுக்கம் பூரணத்துவம் பெற முடியாது. தனி மனிதனுக்கு இல்லையென்ருலும், ஒரு நாட்டின் சமுதா யத்திற்குக் கடவுள் என்னும் குறிக்கோள் பொருள் மிகவும் அவசியமாகிறது. நீங்கள் சொல்லியமாதிரியான இரண்டு வகைகளும் சமுதாய எதிரிகளாக இன்றைய புத்தர்களைப் போலிருக்கின்றன. ஆகவே தனிமனிதன் ஆன்மீகப் போராட்டத்தில் தோற்ருல், அதற்காக நாம், அவன் முன்பிருந்த குறிக்கோளைக் காண்பிக்க முடியாது. ஆனல் அவனுடைய சொந்த குறைபாடுகளைத்தான் கூறவேண்டும்.

கேள்வி: தற்போது விஞ்ஞானத்தில் போற்றக்கூடிய அளவிற்கு உண்டாகியிருக்கும் வளர்ச்சி, மனிதனின் மத நம்பிக்கையின்பேரில் எவ்வித மாறுதலையளிக்கு மென்று சுவாமிகளின் அபிப்ராயத்தில் கருதுகிறீர்கள் என்று சொல்ல முடியுமா?

சுவாமிகள்: விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒன்ருே டொன்று நெருங்கி வருகிறது. விஞ்ஞானி இன்று

Koviloor Digital Library

எல்லாவற்றையும் சக்தியாக மாற்ற முடியுமென்ற முடிவுக்கு வருகிறுன். நான் அதைப் பராசக்தி யென் கிறேன். ஆதலின் அவர்கள் தங்களை யறியாமலே அத்துவைதிகளின் பங்கில் வந்து விடுகின்றனர். உஷ்ணம் மின்சாரம் என்ற பல்வேறு பெயர்களில் பல்வேறு நிலைகளிலிருப்பினும் சக்தி யென்பதுதான் முடிவான திறன் என்ற விஞ்ஞானிகளின் முடிவு அவர்களை சங்கரரின் மத வேதாந்தத்தினிடம் இழுத்துச் செல்கிறது. நம்மைப் பார்த்துக்கொள்வது – ஆன்மா – பார்க்கப்படுவது இவையிரண்டும் முடிவில் ஒன்ருகி விடுகிறது. விஞ்ஞானம் அதன் அழிவுச் சக்தியில் வேறு விஷயமாகும்.

கேள்வி: இன்னுமொரு உலக யுத்தம் வருமென்று நீங்கள் எண்ணுகிறீர்களா? சமாதானத்தைக் காப்பாற்ற உங்களுடைய உபதேசங்கள் என்ன? ஆழ்ந்து புரை யோடுகின்ற சாதி மத வெறிச் சண்டைகள் (வெள்ளை யரை எதிர்த்துக் கறுப்பர், அராபியரை எதிர்த்து யூதர் களும், இந்துக்களை எதிர்த்து முசுலீம்களும்) எப்படித் தடுக்க முடியும்?

சுவாமிகள்: நான் ஒரு தீர்க்கதரிசியல்ல. ஆனுல் மூன்ருவது உலக மகாயுத்தம் கடைசியான யுத்தமாக விருக்கும் என்று சொல்வதற்கு நான் தேவையில்லை. ஏனெனில் உலகமும் இருக்காது. சண்டையும்

Koviloor Digital Library

இருக்காது. இன்றைய அணு ஆயுதப் போட்டி நன்ருக முற்றுவதற்கு நன்றி செலுத்த வேண்டும். ருசியாவும் அமெரிக்காவும் ஒருவர்க்கொருவரையோ உலகத்தையோ அழிக்குமளவிற்கு அவசரப்பட மாட்டார்கள். அன்பு, சகிப்புத் தன்மை, நன்ருகப் புரிந்துகொள்ளுதல், விட்டுக் கொடுக்கும் பண்பு என்னும் போற்றத்தகும் கொள் கைகள்தாம், எந்த தேசிய அரசாங்கத்திற்கும், அதன் அடிப்படைக் கொள்கைகளாகப் பிற நாட்டுடன் தொடர்பு கொள்ளும்போது இருக்க வேண்டும். அப் பொழுதுதான் மனக்கசப்பின் வேகம் தணிந்து உலக சமாதானத்தின் அடிப்படை மலரும்.

கேள்வி: கோயில் புனருத்தாரணம் செய்தல் என்னும் பெயரால் கோயில் நிர்வாகிகள் அதனை அழிக்கும் பண்பு கொண்டு இக்காலத்தில் இருப்பவர்களைப்பற்றிச் சுவாமி களின் அபிப்பிராயம் என்ன? கலைச்செல்வம் கொழிக்கும் கோபுரங்களுக்கு வர்ணம் பூசவும், கல் தூண்களுக்கு வெள்ளையடித்தலும் அக்கோவில்களின் வயதை வளர்க் கிறது. அதற்கு மாருக அவை பொலிவற்று மலிந்து காணப்படுகிறது. நமது கோயில்களின் ஆண்டாண்டு கால அமைதி, சடங்குகளில் முக்கியத்துவம், தெய் வீகத்தன்மை, புனருத்தாரணம் என்ற பெயரால் பலியிடப்படுகின்றன. கரடியான வர்ணங்களிட்டுக் கோபுரங்களில் இருக்கும் சுதைகள் தீட்டப்படுவதால் கொலுபோல் காட்சியளிக்கின்றன. அந்த உடைந்த

Koviloor Digital Library

உருவச் சிலையின் கம்பீரம் காணுமல் போய் விடுகிறது.

சுவாமிகள்: நான் உன்னுடன் ஒத்துக் கொள்கிறேன். இவ்வளவு வேகமாக நீ சொல்லியதுபோல் என்னுல்கூடச் சொல்ல முடியாது. ஒரு கோயில் அழகாக இருக்க வேண்டும். ஆனுல் எல்லாவிதத்திலும் ஆதாரபூர்வமாக இருக்க வேண்டும் என்பது தோற்றக் கவர்ச்சியும் இல்லை. புனருத்தாரண கர்த்தர்களால் அதனுடைய புராதன மேன்மை வருகிறது. நமது கோயில் நிர்வாகிகள் நம்பிக்கை மட்டும் கொண்டிருந்தால் போதாது. அவர்களுக்கு இதில் ஆர்வம் அதிகரிக்க வேண்டும்.

கேள்வி : மக்கள் நல்லொழுக்கத்தின் மீது திரைப் படத்தின் ஆதிக்கத்தைப் பற்றிய சுவாமிகளின் ஆய்வுரை.

சுவாமிகள்: அணு ஆயுதத்தைப் போல திரைப் படமும் ஆக்கம் அழிவு இரண்டு சக்திகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதனை அதன் கலையுருவிலே, விஞ்ஞானத்திற்கான முறையிலே வரவேற்கிறேன். ஆனுல், என்னைப் பொறுத்த வரையில் அதன் உபயோகம் மிகவும் வரையறைக்குட்பட்டது. ஆதாரச்

Koviloor Digital Library

சான்றுக்காகவும், பூகோளம், விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் துறைகள் முதலியவற்றில் கல்விக்காக வேண்டிய படங்கள் மனித குலத்தின் தன்மைக்காக வேண்டியவை. சமூக அடிப்படையில் என்று சொல்லப் படும் நீளப்படங்கள் வர எவ்வித நியாயமும் கிடை யாது. சமூக சீர்திருத்தம் நமது திரைப்படங்களின் குறிக்கோளாக இருக்க முடியாது. சினிமாத் துறை யைத் தங்கள் பிழைப்பாகக் கொண்டு, தங்களை மிகவும் வெளிக்காட்டிக் கொண்டுள்ள காரணத்தால் தற்காலத் திய பெண்களிடம் நாணமும் மடமையும் நற்செல்வ மாகத் திகழாதிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். பண்டைய இந்தியாவில் பெண்கள் தங்கள் கணவன் மார்களிடம் சுயவிருப்புடன் எவ்விதம் குருவிடம் பய பக்தியுடன் நடப்பார்களோ அதுபோன்று சிஷ்யை களாகச் சரணடைந்தனர்.

திரைப்படத்தின் மோகம் நல்லொழுக்கத்தினின்று பயங்கரமாகத் தவறுதலில் முடிவுற்றது. திரைப்படங் கள் செய்யக்கூடிய விஷமங்கள் மனிதனுல் எண்ணிப் பார்க்க முடியாது. பழமையான இந்நாட்டில் பெண் களும் குழந்தைகளும் காப்பாற்ற முடியாத அளவிற்குக் கெட்டிருக்கிருர்கள். நான் முன்பே சொல்லியபடி அணு சக்தியைப்போல திரைப்படமும் ஆக்கத் தொழில்களுக் குப் பயன்படுத்தலாம். அது ஒரு கருவிதான். அதனை மேலான அல்லது கீழான காரியங்களுக்கு உபயோகப்

Koviloor Digital Library

படுத்தலாம், மேடையில் பெண்கள் நடிப்பது சரியே அது அவர்களின் பாரம்பரியக் கடமையாகும். இந்தத் தொழிலில் ஈடுபட்ட சமுதாயத்தை பாரத புத்திரர், கலாவந்த், பரதராஜுலு என்பவர்களைச் சாதிய அடிப்படையில் காணலாம். அவர்களுக்கு நடிப்புதான் தொழில். இவர்களைத் தவிர வேறு குலப் பெண்கள் எவ்வித பாகமும் நடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். தொழிலாகக் கொண்ட பெண்களும் தங்கள் கணவர்களுக்குதவியாகத்தான் மேடைமீது தோன்றுவர். நடி சூத்ரதாரன் என்ற பரம்பரையைப் பற்றித் தனக்கு நன்ருகத் தெரியும் என்று எண்ணுகிறேன். மிகப் பழமையான காலத்தைத்தான், நிலையைத்தான் என் மனதில் கொண்டிருக்கிறேன். அதில் ஒழுக்கக் கட்டுப்பாட்டை எவரும் மீறியது கிடையாது. தாங்களே சட்டமியற்றுபவர்கள் எனத் திரியும் இன்றைய திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு இன்றைய காலத்தில் சட்டமியற்றுவது யார்? அவர்கள் உண்மையிலேயே உல்லாசப் பயணிகளாகத் திகழ்கின்றனர்.

கேள்வி: புராண அடிப்படையினை வைத்து எடுக்கப்படும் படங்களைச் சுவாமிகள் அனுமதிக்கவில்லையென்று எண்ணுகிறேன். அது சரிதானு?

சுவாமிகள்: நான் திரைப்படங்கள் சமூகவியலிலேயே வரக் கூடாது என்று வலியுறுத்தும்போது ஆனும்

Koviloor Digital Library

பெண்ணும் கடவுள் அவர்தம் தேவியராகவும் வரும் துர்பாக்கிய நிலை தோன்றுவதற்கே இல்லை.

கேள்வி: மொழிப் பிரச்சினையைப்பற்றித். தங்கள் அபிப்பிராயம்?

சுவாமிகள்: அதைப்பற்றித்தான் உனக்கு முன்பே பரிச்சயமாயிற்றே இல்லையா? நான் சம்ஸ்கிருதத்தையும், ஆங்கிலத்தையும் ஆதரிப்பவன். இன்றைய இந்திய மொழிகளில் ஒன்றும்...நான் அவைகளில் பெரும் பான்மை தெரிந்தவன்.

இச்சமயத்தில் நான் இடைமறித்து, "அம்மொழி யில் பிறந்தவர்கள் போன்று அவ்வளவு தெளிவாக வென்று நான் உணர்கிறேன்."

சுவாமிகள்: எனக்கு அதைப்பற்றித் தெரியாது. சம்ஸ் கிருதம் ஆங்கிலத்தைப்போல் அதில் பாதியளவுகூட ஒன்றும் நல்லதில்லை. சம்ஸ்கிருதம்தான் நமது பேசும் பொதுமொழி. அடையாளம் காணும் வகையில் இன்றும் அது உயிருள்ள மொழியாக தாய்லாந்து, பர்மா, இலங்கை இன்னும் மற்றைய நாடுகளில் இலங்குகிறது. நாம் சம்ஸ்கிருதத்தை மொழியாக ஏற்றால், தென்கிழக்கு நாடுகளுடன் அவர்களது பொது பாரம்பரியப் பெருமை யில் நாம் பங்கு கொள்ளத் தயாராக விருக்கிறோம் என்ப

Koviloor Digital Library

தால் அவைகளும் இந்தியாவைத் தம்மில் ஒருவராக ஏற்றுக் கொள்ளும். ருசிய மொழிகூட அனேக சம்ஸ்கிருத சொற்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நமது கலாசார மொழியைச் செயல்முறைக்குப் பயன்படும் பண்பிற்கு நவீன மொழியாகத் தரத்தை உயர்த்த இது அவசியமான தருணமாகும். நமது விருந்தோம்பும் பண்பு கொண்ட நாட்டிலிருந்து ஆங்கிலத்தை விரட்ட வேண்டாம். அது ஒரு விஞேதமான மொழி இல்லையா? வெளியுலகத்தினுடன் தொடர்பு கொள்ள ஒரே கருவி அது தான். அகில உலகத் தொடர்புக்கு, இவ்வுலகில் மிகச் சில மொழிகள்தான் ஆங்கிலத்தைப் போன்று வளம் கொண்டுள்ளது.

கேள்வி : சுவாமிகள் செய்தித்தாள்கள் படிக்கின்றீர்கள் என்று நம்புகிறேன். இந்திய சீன எல்லைச் சண்டையைப் பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன? கொழும்புத் திட்டத்தின் அடிப்படையில் சீனுவுடன் நாம் பேச்சு வார்த்தைகள் நடத்தத்தான் வேண்டுமா?

சுவாமிகள் : ஆம்; நான் செய்தித் தாள்கள் படிக்கிறேன். இல்லை, அவைகளை எனக்காகப் படிக்கச் சொல்கிறேன் என்ருல் பொருந்தும். உண்மையில் என்னை ஒரு அரசியல் சிக்கலில் இழுத்துவிட எண்ணவில்லையென்று எண்ணுகிறேன். சீன இந்திய எல்லைச் சண்டையைப்பற்றி நான் எவ்வித முடிவும் சொல்வதற்கில்லை

Koviloor Digital Library

ஆனால் பண்டித நேரு அவர்களுக்கு நன்கு வாதிக்கப் பட்ட, பெர்ட்ராண்டு ரஸ்ஸல் அவர்கள் விடுத்த வேண்டு கோள் எனக்கு மனத் திருப்தியளிக்கிறது. எப்படி திரைப்படத்தின் மீது எனது அபிப்பிராயம் முக்கிய மானது அல்லவோ அதுபோல் அரசியல்வாதிகள் மீது எனது அபிப்பிராயம் முக்கியமானது அல்லதுதான். ஆதலின் அவைகளைத் தள்ளிவிடலாம். வேறு உணர்ச்சி யுள்ள, குறைந்த சிக்கல் கொண்ட வேறெதாவது பொருள் பற்றி விவாதிக்கலாம்.

கேள்வி : ஆர்தர் கோயிஸ்லரின் "தாமரையும் இயந்திர மனிதனும்" என்ற தடுக்கப்பட்ட புத்தகத்தைச் சுவாமிகள் படித்திருக்கிறீர்களா?

சுவாமிகள் : ஆம்; அது தடுக்கப்படுமுன் நான் படித் திருக்கிறேன். இப்பொழுது என்னுடைய முறை நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அப்புத்தகத்தைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயம்?

"அது படிக்கக்கூடியது அவ்வளவுதான். ஆனால் தங்களை கோயிஸ்லர் சந்தித்த வர்ணனை மிகவும் நெகிழ்ச்சியுடையது" என்று பதிலிறுத்தேன்.

சுவாமிகள் : ஆமாம்; ஐரோப்பிய கலையில் வெளிப் படையாகக் காணுவதற்கில்லாத கிருஸ்துவின் புன்ன

Koviloor Digital Library

கையை இந்து சன்னியாசிகளின் முகத்திலில் லகுவாகக் காணமுடிகிறது என்கிருர் அவர்.

"அது குறிப்பாக சுவாமிகளின் திருமுகத்தில் வெளிப்படையாகத் திகழ்வதாக அவர் சொல்கிருர்" என்று நான் குறிப்பிட்டேன்.

சுவாமிகள் : இந்தியாவில் மெய்மை நாடிச் செல்பவர் களிடம் அவர்களுக்கு மரியாதை கிடையாது என்று நான் எண்ணுகிறேன்.

நான் பதிலிறுத்தேன்: "உங்களைப் பொறுத்தவரை யில் பாராட்டுகள் தவிர அவரிடம் வேறென்றுமில்லை. இந்தியாவையும் இந்தியர்களையும் பொறுத்த வரையில், ஒன்றும் தெரியாத ஐரோப்பியர்களின் தீர்ப்பில் ஒன்று தாக்குதலோ அல்லது தவருன கருத்தோதான் உண்டு. சுவாமிகளே! சிருங்கேரிக்கும் காமகோடி பீடத்திற்கும் இடையே ஏனிந்த மனக்கசப்பு? அந்தச் சுவாமிகளும் தாங்களும் பேசுவதுகூடக் கிடையாதென நான் கேள்விப்பட்டேன்."

சுவாமிகள் எவ்விதமான பதிலும் சொல்லவில்லை. ஆனுல் அவரது திருமுகத்தில் ஒரு கூசும் ஜோதி வீசு கிறது. அவருடைய மனித சுபாவம் உள்ளத்துள் ஊன்றியதின் எடுத்துக்காட்டான நற்சான்ருகும்.

Koviloor Digital Library

கேள்வி : சுவாமிகளே மற்றுமொரு கேள்வி கேட்க லாமா? மேலே நாட்டினர் கடவுளைப்பற்றிக் கொண்டுள்ள முடிவுக்கும் இந்தியர் முடிவுக்கும் முக்கியமான வேறு பாடுகள் என்ன?

சுவாமிகள் : கடவுளைப் பற்றிய முடிவில் எப்படி வேறுபாடு கொண்ட அபிப்பிராயங்கள் இருக்க முடியும்? ஆனால் அவற்றைப் பற்றிய மனத்துணிவுகளில் இருக் கலாம். மேலே நாடுகளில் கடவுளை அடைய மதத்தைக் கொள்கிறான். இந்தியாவில் நாம் தத்துவப் பாதையைக் கைக்கொள்கிறோம். இக்கடினமான பிரயாணத்திற்கு நமது சடங்குகள், விழாக்கள், விரதங்கள் எல்லாம் வழி காட்டியாகத் திகழ்கின்றன. மெய்ஞானத்தைத் தேடும் உணர்வு—இவ்வுணர்வினில் என்று பக்தனின் மனம் ஈடுபடுகிறதோ அப்பொழுதே அவனது காரியமும் சித்தி அடைந்து விடுகிறது.

நான் விடை பெற வேண்டி வணங்க எழுந்திருக்கும் போது, "சுவாமிகளே, நான் விடை பெறுமுன் தங்கள் ஆசியை மறுமுறையும் ஆஸ்ரயிக்கிறேன். இந்த நீண்ட நான்கு மணி நேரச் சந்திப்பு சுவாமிகளின் தேகத்தின்பால் எவ்வளவு சிரத்தைக் கொடுத்துள்ளது என்றுணர்கிறேன்."

"நான் எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லி விட் டேனா? என்னுடைய தெலுங்கு நன்றாகவிருந்தது என்

Koviloor Digital Library

றெண்ணுகிறேன்?"—மறுபடியும் சுவாமிகள் மவுனத்தில் ஆழ்கிருர். உணர்ச்சி மிகுந்த மெல்லிய உதடுகளில் சாந்தமான அழகிய புன்னகையையும், பெரிய பிரகாசிக்கும் கண்களில் கட்டுப்படுத்தும் ஒளியையும், பெருமை வாய்ந்த தவத்திருக்கோலமும் என்மீது என் கண்களின்முன் ஆடும் பெருமான் நடராசனின் உணர்வு வேகத்தையும் புத்தரின் சாந்தத்தையும் கொண்டு வந்து நிறுத்துகிறது.

இந்து மதத்தின் தலைமைப் பீடத்திற்கு ஏற்றம் உடையதுமான, நவரத்தினம் படைத்த கிரீடம், சிம்மாசனம், ஒட்டகங்கள், குதிரைகள், யானைகள் இவை யெல்லாம் கூடிய விருதுகளையும் தனது ஆக்கினையின் கீழ் சுவாமிகள் பெற்றுள்ளார்கள். ஆனுல் அவைகளால் அவருக்கு எவ்விதப் பயனுமில்லை. பக்தர்களால் அளிக்கப்படும் பூக்களால் ஆகிய கிரீடத்தைத்தான் அவர் ஏற்கிருர். நடப்பது ஒன்றைத்தான் அவர் பிரயாணத்தில் கைக்கொள்கிருர். மக்களின் இதய சிம்மாதனத்தைத் தான் அவர் பிடித்துக் கொண்டிருக்கிருர். சன்னியாசிகள் சாதாரணமாகப் புரிவார்கள் என்று எதிர்பார்க்கப் படும் ஆச்சரியங்கள் ஒன்றையும் சுவாமிகள் நிகழ்த்துவதில்லை. அவர் மந்திரவாதியல்ல தெரியுமா! உதாரணமாக அவர் கரத்திலிருக்கும் திருநீறு தங்கமாவதில்லை. மலடி அவரது ஆசியால் குழந்தை பாக்கியம் பெறுவதில்லை. நோயாளியை ஆரோக்கியவானுகவும், ஏழை

Koviloor Digital Library

யைப் பணக்காரனாகவும், தோல்வியுற்றவனை ஜெய மடைந்தவனாகவும், ஒரு காலத்தில் செய்யக்கூடும் என்று நடித்ததில்லை. நியூயார்க் பருத்தி எண்களிலோ உத்தி யோக உயர்வோ, ஊதிய உயர்வோ எதிரிகளை அழிப்ப திலோ, வயது கடந்த மணமாகாப் பெண்களுக்கு வரன் தேடிக் கொடுப்பதிலோ உடனடியான முடிவு வேண்டு பவருக்கு அவர் உபயோகப்படுவதில்லை. ஆனால், எந்த மந்திரவாதியும் செய்யக் கூசுகின்ற, முயற்சிக்க எண்ணு கின்ற ஒரு ஆச்சரியகரமானதைச் செய்கிறார். அது தான் கடவுள் நம் முன்னிலையில் இருப்பதை உணரச் செய்கிறார்.

— சாந்தி —

Koviloor Digital Library

Koviloor Digital Library

prabhu printing house, madras-600 017.